# மாமனிதன் அல்பிரட் துரையப்பா

**உங்களிடமிருந்து நான் கற்பதற்கு ஆயிரம் விடயங்கள் இருக்கு. நான் சமுதாயத்தை புத்தகமாகப் படிப்பவன். நான் படித்ததெல்லாம் பஸ் ஸ்ராண்டிலும், தியேட்டரிலும், பீச்சிலும், ஆஸ்பத்திரியிலும், கடைத்தெருவிலும், மொக்கன் கடையில் சாராயக் கஞ்சி குடிப்பவர்களிடமிருந்துதான். உங்களின்ரை பிரச்சனை என்னண்டு முதலிற் சொல்லுங்கோ. இதுவே துரையப்பாவின் சமயோசிதமும் தந்திரோபாயமும்.**

துரையப்பா அவர்களை நினைவுகூரவேண்டிய காலகட்டத்திற்கு நாம் வந்துள்ளோம். மனிதனை மனிதன் நேசிக்கும் கலாச்சாரத்தினை அம்மனிதனிடமிருந்துதான் நாம் கற்க வேண்டும். கொலைவெறி, மனித வக்கிரம், என்பவற்றின் நிலைக்களமாகிவிட்ட யாழ். நகர மேயர் பதவி இந்த ஒரே ஒரு மனிதனால்தான் பெருமை பெற்றது.. இதுவரை இலங்கையில் தோன்றிய மாநகரசபை மேயர்களில் செயல்திறம் மிக்கவர் அவரே என்றால் ஐயமில்லை. அவரோடு வாழ்ந்த அரசியல்வாதிகளான தனிப்பெரும் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம், அண்ணன் அமிர்தலிங்கம் தமிழ்மக்களுக்கு விட்டுச்சென்றது என்ன என்று தேடிப்பார்த்தால் இது விளங்கக்கூடும்.

துரையப்பா விட்டுச் சென்றது யாழ்ப்பாண நியூமார்க்கட், துரையப்பா ஸ்ரேடியம், நாறிமணத்த புல்லுக்குளப் புனருத்தாரணம் போன்ற எத்தனையோ செயலை அவர் செய்துள்ளார். அவர் யாழ்ப்பாணத்தை நிர்வகித்த மற்றய எல்லா மேயர்களைக் காட்டிலும் பலமடங்கு சேவையை அவர் புரிந்துள்ளார். அரசாங்கத்துடன் ஏற்றவாறு எடுத்துக்கூறி மானியத்தை அதிகளவில் பெறும் இராஜதந்திரம் நிறைந்தவர். இதைத் துரையப்பாவின் வார்த்தையிற் சொல்வதென்றால் பூனை கறுப்போ வெள்ளையோ பச்சையோ நீலமோ , அது எலியைப்பிடித்தாற் சரிதான்.(பச்சை-.யூ.என்.பி, நீலம்--சிறிலங்கா சுதந்திரக்கட்சி). யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக்கழகமா? திருகோணமலையில் தமிழ் பல்கலைக்கழகமா? என்று இதில் வித்துவான் யார் என அவர் காட்டியதில்லை. (1965 இல் தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் யூ.என்.பி யோடு சேர்ந்துகொண்டு கூட்டரசாங்கம் அமைத்த காலத்தில் பூனையும் அப்பமும் கதைபோல தங்களுக்குள்ளேயுள்ள வித்துவக்காய்சலால் பல்கலைக்கழகம் ஒன்றினை தமிழருக்குக் கிடைக்காமல் செய்த மகா பெருமை அவர்களைச் சாரும்.) யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கும் சாத்தியக் கூறு இப்பவிருந்தால் அதை இப்ப அமைத்துவிட்டு திருகோணமலையில் அடுத்த பல்கலைக் கழகத்தை அமைக்கும் நோக்கில் நாம் பிரயத்தனப்பட வேண்டும். எப்பொழுதும் சின்னச்சின்ன அடியால் முன்னேறவேண்டும். பெரியபடையல் காவ வெளிக்கிட்டால் பரிதாபமாக வீழவேண்டியதுதான்.

ஒரு தேசிய இனத்தின் தோல்வி அதன் கலாச்சாரம் அழிந்த பின் சாத்தியமாகும் என்பது துரையப்பாவின் எண்ணம். துரையப்பாவைப் பொறுத்தவரை இலங்கையில் தமிழையோ தமிழினத்தையோ தமிழ் கலாச்சாரத்தையோ சிங்களத்தால் அழித்துவிடமுடியாது. அவரது வாதம் என்னவெனில் ஒரு கலாச்சாரம் குறைந்த இனம் கலாச்சாரம் பூத்துக்குலுங்கும் இனத்தை வெற்றிகொண்டால் அந்த இனம் தோற்றபோதும் அந்தத் தோற்ற இனத்தின் கலாச்சாரத்திற்கு வெற்றிகொண்ட இனத்தின் கலாச்சாரம் அடிபணிந்துவிடும். மறுதலையாக ஒரு கலாச்சாரம் கூடிய இனம் ஒரு கலாச்சாரம் குறைந்த இனத்தை வெற்றிகொண்டால் இந்த வெற்றிவாகை சூடிய இனத்திற்கு கலாச்சாரம் குறைந்த இனம் அடிபணிந்துவிடும். தமிழின் கலாச்சாரம் பல்லாயிரம் வருடம் மூத்தது. தமிழரசுக் கட்சியோ தமிழ்காங்கிரஸ் கட்சியோ பயப்படுத்துவதுபோல் இலங்கையில் தமிழினம் அழியப்போவதில்லை. அது இளமை குன்றாது இருப்பதற்கு நாம் வேண்டியவற்றைச் செய்யவேண்டும். ஒரு தேசிய இனத்தின் தோல்வி அதன் கலாச்சாரம் அழிந்தபின்புதான் சாத்தியமாகும். நானோ எமது கலாச்சாரப் பெறுமதிகளைப் பேணுவதற்காக ஔவையார், வள்ளுவர், சோமசுந்தரப் புலவர் போன்றவர்களுக்கு சிலை வைத்துள்ளேன். ஏனெனில் எமது கலாச்சாரம் வீறுகொள்ளவேண்டும். தமிழ் தமிழ் என்று சொல்லி தமிழர்களை ஏமாற்றும் தமிழின் பேரால் வாழும் பிராணிகள், தமிழிலே தமிழ் மக்களுக்கு என்று ஏதாவது எழுதிவைத்திருக்கிறார்களா? கூட்டங்களிலே உங்களுக்கு தமிழிலே விளங்காவிட்டால் இங்கிலீசிலே சொல்லிக்காட்டுறேன் என்று சொல்லி இங்கிலீசிலே

சத்தியெடுத்துக் காட்டுவார்கள்.

பண்டிதர் ஒருவர் சொன்னாராம் எனக்கு தொல்காப்பியமோ நன்னூலோ தெரியாதென்று. அது உண்மைதான். பண்டிதர்களின் தமிழ் எனக்கு விளங்குவது குறைவுதான் .ஆனால் எனக்கு ராக்சி ஓடிற கணவதியன் தமிழும், ரோடு கூட்டுற முனியாண்டியின் தமிழும், மீன்பிடிக்கிற யோசெப்பின் தமிழும், டெயிலர் முனாசின் தமிழும் கொட்டடி கோணாந்தோட்டத் தமிழும் விளங்கும். அவர்களுக்கும் எனது பாஷை விளங்கும். பண்டிதர்களும் வித்துவான்களும் கியூ.சீ.க்களும் அவர்களின் பாஷையைப் பவுத்திரமாக வைத்திருக்கட்டும். எனக்கு உங்களை விளங்கினாற் போதும். நான் கதைக்கிறதும் உங்களுக்கு விளங்கினாற் போதும். எரியிற வீட்டிலே அம்பிட்ட ஒருவனுக்கு அதிலேயிருந்து வெளியாலை தப்பி ஓடுவதற்கு ஒக்ஸ்போர்ட் குவாலிபிக்கேசன் தேவையில்லை.

இவ்வாறு துரையப்பா கரையூரிற் தேர்தல் கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஜீ.ஜீ.பொன்னம்பலம் சாராயம் வேண்டிக்கொடுத்து ஏவிவிட்ட நபர் ஒருவர் மேடைக்கு முன்னால் வந்து உன்னட்டை ஒன்றும் கற்பதற்கு இல்லை, இறங்கடா மேடையாலை என்று கூறினார். உடனே துரையப்பா தம்பி என்னட்டை கற்பதற்கு ஒன்றுமில்லாமல் இருக்கலாம். ஆனால் உங்களடமிருந்து நான் கற்பதற்கு ஆயிரம் விடயங்கள் இருக்கு. நான் சமுதாயத்தை புத்தகமாகப் படிப்பவன். நான் படித்ததெல்லாம் பஸ் ஸ்ராண்டிலும், தியேட்டரிலும், பீச்சிலும், ஆஸ்பத்திரியிலும், கடைத்தெருவிலும், மொக்கன் கடையில் சாராயக் கஞ்சி குடிப்பவர்களிடமிருந்துதான். உங்களின்ரை பிரச்சனை என்னண்டு முதலிற் சொல்லுங்கோ. இதுவே துரையப்பாவின் சமயோசிதமும் தந்திரோபாயமும்.

துரையப்பா யாழ் நூல்நிலையத்தைக் கட்டினபிறகுதான் யாழ்ப்பாணத்தவர்க்கு ஆக்கிடெக்ஸ் என்ற கட்டிடக் கலைச் சொல் மேல் ஆர்வம் வந்தது. அதிலே அவர் சரஸ்வதி சிலையும், தாகூரின் படமும், சாந்தி நிகேதனம் என்ற பெயரும் வைக்கத்தான் எண்ணியிருந்தார். சரஸ்வதி சிலைக்கெதிரான கிறிஸ்தவர்களின் எதிர்ப்பு வந்ததும், அந்தத் திட்டத்திலிருந்து பின் வாங்கினார். சரஸ்வதியின் நான்கு கைகளில் இரண்டு கைகளை எடுத்துவிட்டு யாழ் நங்கை எனப் பெயர் சூட்டினார்.

இலங்கையின் பிரித்தானிய ஏஜண்டாக செயற்பட்டு முதன்முதல் இனவாதத்தின் பேரால் கட்சியை உண்டாக்கி தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையைப் பறித்த மந்திரிசபையில் இருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை, இலங்கையில் இராணுவ சர்வாதிகாரத்தைக் கொண்டுவர சதிசெய்த டீ.மெல் சேரம் போன்ற பிற்போக்கு ராணுவ அதிகாரிகளை தோலகட்டி கத்தோலிக்க சேர்ச்சில் ஒழித்தவைத்துப் பின் வழக்குப் பேசிய பொன்னம்பலத்தை தேர்தலில் எதிர்த்துத் தோற்கடித்த அரசியலை உடையவர் திரு அல்பிறட் துரையப்பா. ஆனால் இந்தத் துரையப்பாவைச் சுடுவதற்கு துரையப்பா விரோத வெறியை ஊட்டியவர்களோ திரு பொன்னம்பலம் தங்களது மகாநாட்டிற்கு வராத போதுங்கூட தமிழர்விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆக்கினார்கள். இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியிலே தோன்றிய எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களிலும் திரு.பொன்.கந்தையாவுக்கு அடுத்ததாக ஆகக்கூடிய சமூக சேவைகளைச் செய்தவர் துரையப்பா. அது மாத்திரமல்ல துரையப்பா யாழ்ப்பாணத்திற்கு செய்த சேவை அளவிற்கு மற்றய எல்லா பாராளுமன்ற அங்கத்தவர்களின் சேவையைக் கூட்டினாலும் ஈடாகாது என்று சொன்னால் மிகையாகாது.

அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகருமென்பதுபோல தங்களது கட்டற்ற பொய்ப் பிரசாரத்தால் துரையப்பாவைத் தமிழ் துரோகி ஆக்கினாகள். இவர்களைத் துரையப்பா எப்படி எடைபோட்டிருந்தார்.

இவர்கள் பிரஜா உரிமைச் சட்டத்தைப் பறித்தவர்களோடு கூட்டுச் சேர்ந்தார்கள்.

பண்டா செல்வா ஒப்பந்தத்தைக் கிழிக்க கண்டியாத்திரை செய்த ஜெயவர்த்தனாவோடு கூட்டுச்சேர்ந்தார்கள்

தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்த பொழுது தமிழையும் சம அந்தஸ்தோடான அரசகரும

மொழி ஆக்கும்படி இவர்கள் கேட்டதில்லை. ஆங்கிலத்தை அரசகருமமொழியிலிருந்து அகற்றவேண்டாமென்றுதான் அடம்பிடித்து தங்களது ஏகாதிபத்திய விசுவாசத்தைக ் காட்டினார்கள். இவர்கள் அப்பொழுது தமிழையும் அரசகருமமொழியாக்கும்படி கேட்டிருந்தால் சிலவேளை அது சாத்தியமாகியிருக்கும். தமிழுக்கு சமஅந்தஸ்தை அன்று கோரியது சமசமாஜக்கட்சி மாத்திரம்தான். கொல்வின் ஆர்.டி.சில்வா ஒரு மொழி இரண்டு நாடு வேண்டுமா? அல்லது இரண்டுமொழி ஒரு நாடு வேண்டுமா? என்று பாரளுமன்றத்திற் பேசினார்.அதுமாத்திரமல்ல தமிழ் சிங்களம் ஆகிய இரணடுமொழிகளையும் அரசகருமமொழியாக்கும்படி சமசமாஜக் கட்சி கொண்டுவந்த பிரேரணைக்கு எதிராக பொன் கந்தையாவைத் தவிர மற்றய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்தே வாக்ளித்தனர். திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கடற்படைத் தளம் அகற்றப்படவேண்டுமென்ற பிரேரணை வாக்களிப்புக்கு விட்டபொழுது அதை எதிர்த்து வாக்களித்தார்கள். மாட்சிமை தங்கிய மகாராணியாருக்கு தந்தியும் அடித்தார்கள்.

தமிழ்மொழிக் கோரிக்கையைத் தவிர்ந்த மற்றய எல்லாப் பிற்போக்குக் கோரிக்கைகளையும் ஆதரித்தே வந்தனர். வேலைநிறுத்தப் போராட்டங்களை, சம்பள உயர்வுக் கோரிக்கைகளை எதிர்த்தே வாக்களித்தனர். அதிலும் ஆகக் கூடின துரோகம் என்னவென்றால் பாடசாலைகளைத் தேசிய மயமாக்கும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தந்தைசெல்வா உட்பட எல்லாத் தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்களும் எதிர்த்தே வாக்களித்தனர். துமிழ் பாராழுமன்ற உறுப்பினரான பொன்.கந்தையா மாத்திரமே பாடசாலைத் தேசியமயமாக்கல் பஸ் கம்பனிகளைத் தேசிய மயமாக்கல், இலவச வைத்தியவசதி மசோதா, காணி உச்சவரம்பு போன்ற முற்போக்கு வேலைத்திட்டங்களுக்கு சார்பாக வாக்களித்தார்.

இதைச்சிறு விளக்கத்தோடு:- பொன் கந்தையா தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்துவிட்டு பண்டாரநாயக்கா கொண்டுவந்த எல்லா முற்போக்கு நடவடிக்கைகளையும் ஆதரித்து வாக்களித்த பொன். கந்தையா தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தார். தனிச் சிங்களச் சட்டத்திற்கு எதிராக அவர் உரையாற்றுகையில் இந்த நாட்டில் வாழும் தமிழ்பேசும் குடிமகன் ஒருவன் தனது மனைவியுடன் அல்லது தனது பிள்ளைகளுடன் அல்லது தனது உறவினர்களுடன் எந்த மொழியில் உரையாடுவது என்பதைத் தீர்மானிக்கும்படி கோர வரவில்லை எனவும், பதிலாக இந்த நாட்டின் தமிழ்ப் பிரஜை என்ற வகையில் தனது அரசாங்கத்துடன் எந்த மொழியில் உறவாடுவது என்பதைத் தீர்மானிக்கும்படி கோருவதாக மிகவும் நறுக்காக தெரிவித்தார். தமிழரசுக் கட்சி, தமிழ்காங்கிரஸ்கட்சி பின்னாளில் தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்விரோதச் சட்டங்களை எதிர்த்து வாக்களித்த அதே வேளை யூ.என்.பியோ சிறீலங்கா சுதந்திரக்கட்சியோ கொணர்ந்த எல்லாப் பிற்போக்கு நடவடிக்கைளையும் ஆதரித்தே வாக்களித்து வந்தனர்.

இதன் உச்சக்கட்டமாக தரப்படுத்தலின் பின்னரும், துரையப்பா கொலையின் பின்னரும் வங்கி ஊழியர் வேலைநிறுத்ததை எதிர்த்தனர். மத்தியவங்கி மொழிவழித் தொழிற்சங்கச் செயலாளர் ஈழவேந்தன் சிறீமா பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தை ஈடாடச்செய்த மத்தியவங்கி வேலைநிறுத்தத்தைத் தோற்கடிப்பதற்காக மத்திய வங்கித் தமிழ் ஊழியர்களை வேலைக்குப் போகச் செய்தார்.அப்பொழுது அவர் ஓதிய தாரக மந்திரம் சிங்களவனும் சிங்களவனும் சண்டைப் படுகிறான். யார் தோற்றாலென்ன? வென்றாலென்ன? எமக்குக் கவலையில்லை என தனது கருங்காலித்தனத்தை நியாயப்படுத்தினார். அன்றைய அரிசிப் பஞ்ச காலத்தில் நடந்த சம்பள உயர்வுப் போராட்டம் அது. அதையடுத்து பேராதனைப் பல்கலைகழகத்தில் வீரசூரியா என்ற பல்கலைக்கழக மாணவனைச் சுட்டதைத் தொடர்ந்து நடந்த மாணவர் எழுச்சியின்போதும் கூட இவர்கள் அரசாங்கத்திற்கு முண்டாக இருந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் பச்சைத்துரோகம் என்னவெனில் தமிழ் மொழிசார்ந்த அரசாங்கத்தின் தமிழ்விரோத செயற்பாடுகளை எதிர்க்கும் அதே வேளையில் சமூகத்தின் நலிவடைந்த மக்களைப் பாதிக்கும் சகல பிற்போக்கு முயற்சிகளுக்கும், சமூக நலன்புரி கொடுப்பனவுகளை நிறுத்தும் முயற்சிகளுக்கும் முண்டாகவும், முற்போக்குச் செயற்பாடுகளுக்கு விரோதமாகவும் நடந்துகொண்டு கச்சிதமாக தமிழ்மக்களையும் சிங்கள மக்களையும் பொதுப் பிரச்சனையில் இணையாது தடுத்தனர்.

இங்குதான் துரையப்பா இவர்களிலிருந்து வித்தியாசப்படுகிறார். துரையப்பா தமிழ்விரோதக் கோரிக்கைகளை எதிர்த்த அதேவேளையில் சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடிய எல்லாச்

செயற்பாடுகளையும் ஆதரித்து வந்தார். 1960 இல் நடந்த இடைக்காலத் தேர்தலில் யூ.என்.பி, இடதுசாரி ஐக்கியமுன்னணி இரண்டில் ஒன்றுமே பெரும்பான்மைப் பலத்தைப் பெறாதபோது, இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் தந்தை செல்வநாயகத்திடம் சென்று தமிழுக்குச் சம அந்தஸ்த்து வழங்குகிறோம். பண்டா- செல்வா ஒப்பந்தத்தை அமுல் நடாத்துகிறோம், தங்களோடு சேர்ந்து அரசாங்கம் அமைக்க வரும்படி கேட்டார்கள். திரு.செல்வநாயகம் அதை மறுத்துவிட்டு யூ.என்.பி யோடு கூட்டுக்குச் சென்றார். இந்தக் கலந்துரையாடலில் அவர்களோடு கூடவிருந்த பழைய ஊர்காவற்துறைப் பாராளுமன்ற அங்கத்தவர் நவரத்தினம் பலதடவை இந்த உண்மையைச் சொல்லியிருக்கிறார். மேலும் 1965 இல் தமிழரசுக் கட்சி தமிழ் காங்கிரஸ் கட்சிகள் தேர்தல்வரை ஒருவரோடொருவர் கொல்லுப்பட்டுவிட்டு தேர்தல் முடிந்த மறு நாள் யூ.என்.பி யோடு கூட்டுக்குச் சென்றார்கள். அந்தக் கூட்டுக்குச் சென்றபொழுது தமிழுக்குச் சம அந்தஸ்த்து தரும் நிபந்தனையை வைத்துக் கூட்டுச் சேர்ந்திருக்கலாமே. இதிலும் பார்க்கப் பெரிய பிரச்சனை இருந்ததா? அவர்களைப் பொறுத்தவரை தமிழுரிமையல்ல பிரச்சனை. இடதுசாரி அரசாங்கம் வரக்கூடாது என்பதே தமிழிலும் மேலான பிரச்சனை. 1970 தேர்தலுக்கு முதன் நாள் தமிழரசுக் கட்சியின் சுதந்திரன் பத்திரிகையிலும் வீரகேசரியிலும் தலையங்கக் கட்டுரையாக தந்தை செல்வநாயகத்தின் ஆபத்தின் மத்தியில் ஒரு வேண்டுகோள் என்ற பெயரில் அறிக்கை வெளிவந்தது. அந்த வேண்டுகோள் இதுதான். “ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் யு.என்.பீ க்கு வாக்களியுங்கள்.“ யு.என்.பீ யின் ஜனநாயகத்தை 1983 இல் தமிழ் மக்கள் அனுபவித்தார்கள். திரு.செல்வநாயகத்தின் அறைகூவல் வந்ததும் கொழும்பிலுள்ள அனேக தமிழர்கள் தமிழரசுக் கட்சிப் பிரமுகர்களிடம் இது என்னபிரச்சனை? திரு. செல்வநாயகத்திற்கு என்ன மூளை குழம்பிவிட்டதா? என்று கேட்டார்கள். இப்பொழுது கனடாவில் வாழும் தமிழரசுக் கட்சிப் பிரமுகர் கரிகாலன் இவ்வாறு கூறினார். சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் லஞ்சம் வாங்கிவிட்டு இப்படி எழுதிவிட்டாரென்று. இதைத்தொடர்ந்து கோவை மகேசனிடம் சென்று ஏன் இப்படிப் பொய் எழுதினீர்கள்? எனக் கேட்டார்கள். கோவைமகேசன் பதில் இவ்வாறு இருந்தது. “தமிழ்தான் என்னுடையது, சாராம்சம் தந்தை செல்வாவுடையது. என்னோடு சண்டைக்கு வராதையுங்கோ. இதனை தந்தை செல்வா ஒருபொழுதும் மறுத்துரைத்ததாக வரலாற கிடையாது. இப்படியான துரோகத்தனம் எதையும் துரையப்பா செய்தது கிடையாது. ஏனெனில் அவர் ஏதோ ஒரு அரசியற் கட்சியின் அங்கத்தவரோ அல்ல.

மற்றவொரு உண்மையாக்கப்பட்ட புனைகதையொன்றுண்டு. அதுதான் ஆடலழகி லீலா நாராயணன் சம்பந்தப்பட்டது. யாழ் பல்கலைக் கழகத்தை திறப்பதற்கு வந்த சிங்கள அரசியல்வாதிகளுக்கு திரு துரையப்பா நாகரீகத்தின் பேரிலும், சம்பிரதாயத்தின் பேரிலும் விருந்துபசாரம் நடாத்தினார். அந்த விருந்துபசாரத்திற்கு அழைக்கப்பட்ட கலைஞர்களுள் குச்சுப்பிடி நாட்டியப் பேரொளி லீலா நாராயணனும் அடங்குவர்.கதையொன்று காட்டுத்தீபோல் காதுகள் செவிடாகும்படி பரவியது. துரையப்பா லீலா நாராயணனை அனுராபண்டாரநாயக்காவுக்கு கூட்டிவிட்டிட்டான். வாலிப வட்டங்களின் அரசியல் கலந்துரையாடல் லீலா நாரயணனை அனுரா பண்டாரநாயக்காவுக்கு கூட்டிவிட்ட கதையாகவே இருந்தது. இவ்வாறு மனித நாகரீகத்திற்கு அப்பாலும் சென்று ஓர் பெண்ணை இழிவு செய்யும் அரசியல் நாகரீகம் இந்தக் கனவான்கள் மத்தியிலே காணப்பட்டது. இந்தக் கற்பனைக்கதைதான் துரையப்பா வெறுப்பினை ஏற்படுத்துவதற்கு ஊற்றிடமாக அமைந்தது. எவ்வாறு எம் சமூகம் பகுத்தறிவு வற்றிவிட்ட சமூகமாகியது என்பதை இப்பொழுதுதான் புரியக் கூடியதாக இருந்தது.

அடுத்த அணுகுண்டு யாழ்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் கொலைகளை துரையப்பாவின் பேரில் பதிந்தது. மடிந்தவர்கள் மின் கம்பி அறுந்ததால் ஏற்பட்ட மின் அதிர்ச்சியால் ஏற்பட்டதாகும். எந்தவித பாதுகாப்பு ஒழுங்குகளையும் கருத்திற்கொள்ளாது அந்த மகாநாட்டை ஒழுங்கு செய்தவர்கள் எதிர்பார்த்திராத அளவுக்கு சனநெருக்கடி ஏற்பட்டதால் அந்த அல்லோல கல்லோலத்தின் விழைவால் மின்கம்பங்களின் சமநிலை பிறழ்வால் அம் மனித உயிர்கள் பறிபோன கோரத்தினை அரசியல்வாதிகள் தமது சுயலாபத்திற்காகப் பயன்படுத்தினார்கள். பொறியியலாளர்கள் மலிந்த யாழ்ப்பாண சமூகம் உண்மையைத் தேட ஏன் முனையவில்லை? ஏன் அவ்வாறு ஊகிக்க முடியவில்லை? அதிகளவு சனநெருக்கத்தால் மாமூல் நிலை பிறழ்ந்த சூழலில் உள்ளங்கால் தொடக்கம் உச்சிவரை தமிழ் விரோதத்தால் வழிந்த பொலீஸ் இராணுவத்தினரின் அராஜகத்தை அரசாங்கத்தோடு தீர்க்க வக்கற்ற, வகை அறியாத தமிழ் அரசியல்வாதிகளின் எல்லாத் துரோகங்களின் வடிகால்கள் யாவும் துரையப்பாவின் பக்கம் கால்வாய்கட்டி திசைதிருப்பி விட்டதுதான் இவர்களின் கைங்கரியமாக இருந்தது. நேரு ஒருமுறை சொல்லுகின்றார் இவ்வாறு கூறினார். விபச்சாரிகள் இல்லாவிடில் கற்புக்கரசிகள் நிலை

என்னவாகும் என்றார்.

இப்பொழுதோ மேலும் பரம்பரைச் சொத்தைப் பாதுகாக்கும் நாடகம் சந்திக்கு வந்திருக்கிறது. தந்தை செல்வா முடிந்து, அண்ணன் அமிர்தலிங்கம் முடிந்து, தம்பி பிரபாகரன் யூ.என்.பி யை நம்புவதாகக் கூறிவருகிறார். வன்னியிலே ஊடகவியலாளர் மகாநாட்டிலே றணில் விக்கிரமசிங்காவின் மேல் அவர் பாடிய கீர்த்தனத்தைப்போல் இன்றுவரை ஒரு தமிழ் அரசியல்வாதி எவரும் பாடியதில்லை. துரையப்பா கோவிலில் வழிபாட்டிலிருந்தபோது ஒழித்திருந்து கொலை செய்த ஒரேயொரு கைங்கரியம்தான் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் தேசியத்தலைவர் ஆனதுக்கான ஒக்ஸ்போர்ட் குவாலிபிக்கேசன். உதாரணத்திற்கு மன்னார் விக்டர், கிட்டு, மாத்தையா போன்றவர்கள் பல போர்க் களங்களைக் கண்டதால் முன்னுக்கு வந்தவர்கள். தேசியத்தலைவர் பிரபாகரன் துரையப்பாவைக் கொன்றதைத் தவிர போர்முனையிலே என்ன புறநாநூறு படைத்தார்? இன்று இவ்வளவு தமிழர்களைக் கொன்ற யு.என்பியோடு பின்கதவாலும் முன்கதவாலும் அரசியல் விபச்சாரம் செய்துகொண்டு, மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் பற்றிய எந்தவித உணர்ச்சியும் இல்லாமல். பங்கருக்குள் ஒழித்துக்கொண்டு துரோகிப் பட்டங்களை அச்சடித்துக்கொண்டிருக்கிறார். துரையப்பா யாழ் பல்கலைக் கழகத் திறப்புவிழாவுக்கு வந்த ஸ்ரீமாபண்டாரநாயக்கா என்ற இலங்கைப் பிரதம மந்திரியைத்தான் வரவேற்றார். இராணுவத்தளத்திலே உயர் இராணுவ அதிகாரிகளோடு சாணக்கியம் கதைக்க வந்த றணில் விக்கிரமசிங்காவை வரவேற்கவில்லை. யாழ்பாணத்திலே யூ.என்பி வேட்பாளருக்கு கள்ள வோட்டுப்போட்டு எம்.பி ஆக்கவில்லை.

துரையப்பாவைக் கொன்றபொழுது முதலாவது துரோகி மாண்டான் என்றார்கள். அண்ணன் அமிர்தலிங்கத்தைக் கொன்றபொழுது கடைசித் தமிழ் துரோகியும் மாண்டான் என்றார்கள். அமிர்தலிங்கத்தின் கொலையானது இனிமேல் தமிழினத்திலே துரோகிகள் தோன்றாத தடுப்பூசி என்றார்கள். வேகு சீக்கிரத்திலே முழு இலங்கைத் தமிழர்களும் துரோகி என்ற செய்தியை நாம் கேட்கலாம். தலைவர் பிரபாகரன் என்ற ஒருவர்மட்டும் புறநீங்கலாக.

துரையப்பா தனது சின்ன அரசியலிலும் மேலான தனிமனித ஆழுமையைப் பெற்றவர். அவர் சிறை சென்ற செம்மலோ போர்க்களங் கண்ட வீரத் தழும்புகளோ பதித்தவர் அல்லர். அவர் ஒரு பரோபகாரி என்பதற்கப்பால் போகாதவர். அவர் ஒரு மாநகரசபை மேயர் அந்தஸ்த்தில் இருந்துகொண்டு முதலாளித்துவ அமைப்பு முறைக்குள்ளேயிருந்துகொண்டு முதலாளித்துவ அமைப்பு முறைக்கே உரித்தான ஊழல், லஞ்சம், பந்தம் பிடித்தல், வால்பிடித்தல மூலமாக யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்யும் கலையை வளர்த்துக் கொண்டவர். இலங்கை இனவாத சூழலில், தமிழ்மக்களுக்கு எண்ணற்ற வஞ்சகத்தை கொழும்பு ஆட்சியதிகாரம் செய்துகொண்டிருந்த வேளையில், அதனுள் சாதிக்கக்கூடிய அதியுயர் சேவையை யாழ்ப்பாணத்திற்கு செய்தார். அவர் புதிய மார்க்கட்டையும். புதிய பஸ் ஸ்ராண்டையும் ஏன் புதிய மாநகரசபையை ஒவ்வொரு கல்லுக் கல்லாகக் கட்டினார் என்றால் மிகையாகாது. தமிழ் தமிழ் என்றுசொல்லி சமூதாயத்தைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிய ஒட்டுண்ணிகளுக்கு முன்னால் ஆலையில்லா ஊரக்கு இலுப்பைப் பூ சர்க்கரைபோல விளங்கியவர். அவரின் கொலையானது இலங்கைத்தமிழ் மக்களின் அரசியற் கொலை சம்பிரதாய வேள்வியின் ஆரம்பமாக அமைந்தது. இலங்கைத்தமிழ் மக்களுள் அரசியல்வாதிகள் அற்பமான பிராணிகளாகும். அவர்களது ஆயுள் மிகக் குறைந்ததாகும். இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியிலே தமிழில் வெளிவந்த அரசியல் மூலப் புத்தகங்களையும் அரசியற் கட்டுரைகளையும் ஒருவர் படிப்பாராயின் இந்த உண்மையை எந்தவித அங்கலாய்ப்புமின்றி ஏற்றுக்கொள்ளுவர். அண்ணன் அமிர்தலிங்கம் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கொரு நினைவு மலர் வெளியிட முனைந்தார்கள். அவரது பாராளுமன்றப் பேச்சுக்களைத் தவிர வேறொன்றையும் அவர் விட்டுச் செல்லவில்லை. அவரது பாராளுமன்றப் பேச்சுகளை வெளியிட்டால், அவர் யூ.என்.பீ க்கு முண்டு கொடுத்ததையும் முற்போக்கு முயற்சிகளை எதிர்த்ததையும் தவிர வேறொன்றும் மிஞ்சியிராததால் அதை வெளியிட முன்வந்தவர்களே தயங்கிக்கொண்டிருக்கிறார்கள். தேசியத் தலைவர் பிரபாகரனது துரோகப் பட்டியலும் வெளியாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை. ஆதலால் துரையப்பாவில் தொடங்கிய அரசியற் கொலை, இப்பொழுது இலங்கைத் தமிழரில் அரசியற் புத்தி ஜீவிகள் அறவே இல்லாத நிலைக்கு கொண்டுவந்து விட்டுள்ளது.

யராவது தமிழர் அரசியல் பேசவேண்டுமானால் தமிழீழத்தில் ஏற்பட்ட அவலங்களின் சூத்திரதாரிகள் யார் என்பதையும், அந்தக் கொடுமைகளின் ஊற்றுக்கண் எங்கேயுள்ளதென்பதை

www.tamilarangam.net

ஆராயாமல், அரசியலைச் செய்ய இயலாது. துரையப்பா அரசியல் வானுக்கு வருவதற்முன்னரேயே இக் கொடுமைக்கான விதைகள் தூவப்பட்டிருப்பதை ஒருவரால் காண முடியும். அப்படிச் செய்ய இன்று முயற்சிப்பவரெல்லாம் தேசியத் தலைவரின் செயற்பாடுகளை விமர்சன நோக்கிற் பாராது செயற்படுவதென்பது வெற்றிடத்திற்கு பண்டாரவெடி வைப்பது போலாகும். அவரை விமர்சித்த மறுகணமே துரோகிகள் ஆகிவிடுவர். என்னமாதிரி கல்லுக்கு எண்ணையும் பாலும் ஊற்றி கும்பாபிஷேகம் செய்து கல்லைக் கடவுளாக்கினார்களோ, அதேபோற்தான் தேசியத்தலைவர் மேல் சித்திரக் கீர்த்தனம் பாடி மேலும் மேலும் அவரை உச்சிக்கு ஏற்றுவதைத் தவிர வேறோன்றையும் புலிப் பிரகிருதிகள் அனுமதிப்பதில்லை. இந்தப் பின் புலத்தில்தான் நாம் மீண்டும் துரையப்பா கொலையை அணுகவேண்டியுள்ளது.

நாங்களுமே பஸ்டியாம்பிள்ளை, இன்ஸ்பெக்டர் குமார் கொலையுண்ட செய்தி கேட்டு பூரிப்படைந்தவர்கள்தான் இந்த மனிதர்கள். துனி மனிதனை அழிப்பதன் மூலம் அவனது இலட்சியங்களைக் கொன்றுவிடலாம் என்ற பயங்கரவாதம் கொடிகட்டிப் பறக்கும் வரை தமிழ் மக்களுக்கு விமோசனம் இல்லை. தனிமனித பயங்கரவாத முறைகள் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பாதுகாப்பதாகவே இறுதியில் முடிகிறது. தம்பி பிரபாகரம் மிகவும் கச்சிதமாக தமிழர் போராட்டத்தினை சர்வதேச ஏகாதிபத்தியத்திடம் இன்று கையளித்துள்ளார். உலக ஏகாதிபத்தியங்களோடு ஆயிரம் ஆயிரம் இழைகளால் பின்னப்பட்ட இனவாத இலங்கை அரசை தோற்கடிக்க முடியாதென்பதை வரலாறுகள் எண்ணற்ற முறை நிரூபித்துள்ளன. இந்த உண்மையைச் சொன்ன அண்ணாமலை போன்ற அரசியல்வாதிகளையெல்லாம் பயங்கரவாதத்தை தங்களது அரசியல் மூலோபாயமாகக் கொண்டவர்கள் கொன்று பசியாறியுள்ளனர். புலி இயக்கத்தினருக்கு தமிழ் ஈழ இலக்கிலும் பார்க்க புலி இயக்கத்தின் வாழ்வும் வளமும் முக்கியமானது. அந்த இயக்கத்தின் பேரால் இன்று பல வியாபாரிகள் முளைத்துள்ளார்கள். இன்று தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை விட இம் முதலாளிகளின் நலன்களே முக்கிமானவை. ஆரசாங்க கொந்தராத்துகளை, அபிவிருத்தித் திட்டங்களுக்காக வெளிநாடுகள் கொடுக்கும் பணத்தினை சுருட்டிக்கொள்ள, போக்குவரத்துக்கென பஸ் வண்டிகளை தமிழனுக்குத் தமிழன் விடும் வண்டி என்ற பெயரில் மக்கள் மேல் மேலும் சுமைகளை ஏத்தவைத்து மேலும் கொழுக்க நவீன முதலாளிகள் மேற்கொள்ளம் முயற்சியே தற்போதைய சமாதானம் ஆகும்.

ஒரு இராட்சத காந்தம் கவர்வதைப் போல துரையப்பா விழிம்புநிலை மக்களைக் கவர்ந்தார். அவர்களுக்கு கூட்டுறவு ஸ்தாபனங்களிலே வேலைவாங்கிக் கொடுப்பதிலும் அவர்களை லோங்ஸ் போடப்பண்ணிப் பார்ப்பதையுமே அவரது உள்ளம் உந்தித் தள்ளியது. நூற்றாண்டுகளாகக் கீழ்சாதியென்று ஒதுக்கப்பட்ட மனிதர்களை ஒவ்வொருவராக மேலுக்குக் கொண்டு வர முயன்றார். அவர் உயர் வர்க்கத்தில் செல்வச் செழுமையோடும் , யாழ்ப்பாணத்து மேயார் என்ற அந்தஸ்த்தோடும் இருந்தபோதும், மிக எளிமையாகவும் அன்னியோன்யமாகவும் சாரங்கட்டின சனங்களோடும் கூலிவேலைசெய்த ஏழைகளோடும் பழகினார். எந்தச் சிபாரிசுக் கடிதமோ தரகரோ இல்லாமல் எவரும் சந்திக்கக்கூடிய மனிதர் துரையப்பாதான். இந்தக் குணாம்சத்தைப்பொறுத்தவரை அவருக்க நிகராக ஒருவரும் தோன்றவில்லை. அவரது உணர்வும், கலாச்சாரமும் அவரை அப்படி நடக்கும்படி உந்தியது.

அவரைச் சுட்டவர்கள் தமிழீழத்தின் பேரால் சுட்டார்கள். அவர்மேல் வசைபாடி திட்டித் தீர்த்த தமிழ் தலைவர்கள் தங்களது மேடைப் பேச்சுகளில் ‘‘எல்லோரும் இன்புற்று இருப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியோம் பராபரமே‘‘என்ற மேற்கோளைக்காட்டி ஒருபோதும் பேசியதில்லை. ‘எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் , இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்‘‘ என்று சொல்லியிருக்க மாட்டார்கள். சட்டத்தரணிகளாக சட்டத்தையும், ஒழுங்கையும் மதிப்பவர்களாக தங்களைக் காட்டிக்கொண்ட தமிழ் தலைவர்கள் அவரது கொலையை மனமகிழ்வோடு ஆதரித்தார்கள். அதன் பலா பலன். தமிழீமோ சட்டமும் ஒழுங்கும் அற்ற கட்டுப்பாடற்ற சமுதாயமாக மாறியதற்கான பொறுப்பை, அவர்கள்தான் ஏற்கவேண்டும். அவர்கள் கேட்டுக்கொண்டதெல்லாம் துரையப்பா அனுதாபிகளிடமிருந்து தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தை பொலீஸ் பாதுகாக்க வேண்டுமென்பதைத்தான். துரையப்பா புதைக்கப் பட்டாலும் அவர் என்ன லட்சியத்தை அடைய விரும்பினாரோ அதை யாழ்பாணத்து புல்லுக்குளம் சொல்லும்.

## அல்பிரட் துரையப்பா பற்றி தற்போது ஏன் பேசவேண்டும்?

தனி மனிதர்களைக் கொல்வதன் மூலம் அவர்களது இலட்சியங்களைக் கொன்றுவிடலாம் என மேற்கொண்ட பைத்திக்காரத்தனத்தின் விளைவை நாம் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில் தொடர்ச்சியாக துரோகத்தனங்களை மேற்கொண்டு தனது அதிகார ஆசைக்காக எதையும் செய்யச் சித்தமாக இருந்த குமார் பொன்னம்பலம் போன்றோர் மா மனிதர்களாகப் போற்றப்படும் இச் சூழ்நிலையில் சாதாரண ஏழை எளிய மக்களின் மேம்பாட்டிற்காக உழைத்த துரையப்பாவை நாம் துரோகியாக வரலாற்றில் காட்ட முனையும் அப்பட்டமான துரோகத்தனத்திற்கு ஓர் முற்றுப்புள்ளி வைப்பதே இதன் நோக்கமாகும். அன்று அந்த மனிதன் கொலை செய்யப்பட்டபோது வாய்மூடி மௌனமாக மகிழ்ச்சி அடைந்தவர்கள் இதே துப்பாக்கிக்கு தாமும் இரையானார்கள்.

இன்று நாம் வாழும் சமுதாதயம் பற்றி வெளிப்படையாகவே நாம் பேசவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். அன்று துரையப்பாவில் ஆரம்பித்தவர்கள் இன்று 60 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் மரணத்தைத் தழுவியபின்னரும் ஆயுதப் போராட்டம் பற்றிப் பேசுகின்றனரே? தமிழர்களின் அரசியல் சாம்ராஜ்யத்தினை மனித பிண்டங்களின்மேல் கட்ட விரும்புகிறார்களே? இதனை ஓர் சமுதாயம் மௌனமாக ஏற்றுக்கொண்டிருக்கிறதே! ஆயுதப் போராட்டமும், அதனூடாகப் பெறப்பட்ட வன்முறைக் கலாச்சாரமும் உலகமெங்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு மிகவும் அவமதிக்கத்தக்க சமுதாயமாக உலகமெங்கும் அடையாளம் காட்டப்படுகிறதே! இதுவா நாம் தேடும் பெருமை? துரையப்பா ஒரு தனி மனிதன். துரையப்பாவிற்கு ஓர் அரசியல் உண்டு. சாதாரண மக்களின் வாழ்விற்காக உழைத்தல், சிங்கள மக்களின் உதவியுடன் தமிழர் பிரச்சனைகளைத் தீர்த்தல். இந்த இரண்டு இலட்சியங்கள் இன்று வரை வாழ்கின்றன. யாழ். நகரத்தின் ஒவ்வொரு மூலையும் அதற்கான சாட்சியமாக அமையும். ஆனால் தமழர்களின் தலைவர்கள் எனப்பட்டவர்கள் நினைவாலயமாக வாழ்கிறார்கள். அவர்ளின் நாமத்தைச் சொல்ல யாருக்கும் நாதியில்லை. இன்று மனிதனின் மரணங்கள் போற்றப்படுகின்றன. மனிதன் இறப்பது பெருமையானது என அடித்துக் கூறப்படுகிறது. மனிதனின் மரணங்கள் பெருமைப்படுவற்குரியன அல்ல. ஓர் மனிதன் பூரணமாக வாழ ஒரு சமுதாயம் அனுமதிக்கவேண்டும். மனிதன் இந்தப் பூமியில் மனிதனாக வாழவேண்டும். ஆயுதப் போராட்டத்தின் கொடுமைகளால் மனிதனை மனிதன் கொடுமை செய்யும் விலங்கு மனப்பான்மை நியாயப்படுத்தப்படுகிறது. மனிதனின் மரணங்களில் மகிழ்ச்சியும், உணர்ச்சியும் ஊட்டப்படுகிறது. எதிரியின் மரணம் மகிழ்ச்சிக்குரியதாக, மரணமே நியாயமானது என வர்ணிக்கப்படுகிறது. நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டபோது அவரது மரணம் நியாயமானதே என குமார் பொன்னம்பலம் பத்திரிகைகளில் நியாயப்படுத்தினார். அவரும் அதே வழியில் சென்றார். மனிதனின் மரணங்களில் மகிழ்ச்சி அடைவதும், அதனை நியாயப்படுத்துவதும் அவ்வாறான போக்கினை கைதட்டி ஆரவாரிப்பதும் ஒரு சமுதாயத்தில் நிலவுமானால் இச் சமுதாயம் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். ஓர் உழுத்துப்போன, நாகரிகமற்ற ஓர் சமுதாயத்தினால்தான் இவ்வாறு செய்யமுடியும். மௌனமாக இருந்து இக் கொடுமைகளைத் தொடர ஒரு சமுதாயம் அனுமதிக்குமானால், முழு சமுதாயத்தினையும் குற்றம் சொல்வதைத் தவிர வேறு வழி இருக்கமுடியாது.

பல்லாயிரக்கணக்கான மரணங்களை ஏற்படுத்திய பின்னரும், அம் மக்களின்மேல் மேலும் மேலும் துயரங்கள் சுமத்தப்படுகிறதோ, அத் துயரங்களின் பின்னரும் இக் கொடுமையாளர்களின் பின்னால் கோஷம்போட்டு ஒரு சமுதாயம் செல்கிறது என்றால் இக் கொடுமை தடுக்கப்படவேண்டியது அவசியமாகும். பொதுவாழ்வுக்காக தன்னை அர்ப்பணிக்கும் மனிதன் கௌரவிக்கப்படவேண்டும். தவறுகளுக்கு மரணங்கள்தான் தண்டனை எனில் யாரும் மிஞ்ச முடியாது. துரையப்பா இன்று எம்முடன் இல்லை. ஆனால் அவர் நம்பிய இலட்சியங்கள் இன்றும் வாழ்கின்றன. விடுதலையில்லையேல் அபிவிருத்தி இல்லை என்றவர்கள் இடைக்கால நிர்வாகம் என்ற தங்குமடத்திற்கு வந்துள்ளார்கள். சிங்களவருடன் இனிமேல் வாழமுடியாது என்றவர்கள் பேசித் தீர்ப்போம் எனக் கூறுகிறார்கள். இதில் யார் துரோகிகள்?

மிகவும் உயர்ந்த நாகரிகத்தின் வாரிசுகள் என பெருமிதப்படும் நாம் எவ்வாறான செயற்பாடுகளைத் தத்தெடுத்து வருகிறோம்? இனியும் பொறுத்திருக்க நியாயமில்லை. தமிழன் என்ற பெயராலும், உரிமை என்ற பெயராலும், விடுதலை என்ற பெயராலும் மேற்கொள்ளப்படும் அநாகரிகத்திலிருந்து எமது மக்கள் மீட்டெடுக்கப்பட வேண்டும். எமது பெயரால் இனியும் கொலைகள் வேண்டாம். எப்போதும் வேண்டாம் என்போம்.

www.tamilarangam.net

-ஈழவன